கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகிரி

முன்னிலை- திருமதி. K.L. பிரியங்கா., B.A.B.L., (Hons)

கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் , சிவகிரி

2021-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாள் செவ்வாய் கிழமை

அசல் வழக்கு எண். 158/2013

*************

1. பெரியமாரியப்பன் .......... வாதி

/எதிர்/

1. பாலசுப்பிரமணியன்
2. முருகன்
3. குமார்
4. கருப்பையா
5. பரமசிவன் ...........பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 23.11.2021-ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு..ஆர்.சின்னத்துரை அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5-பிரதிவாதிகளுக்காக வழக்கறிஞர் திரு,P.R.P. பழநி அவாகள் ஆஜராகியும், விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பில் உபயவாதிகளுக்குள் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானமாக பேசி வழக்கு முடிக்கப்பட்டதால் மேல்நடத்தவில்லை என குறிப்பரை ( Not Pressed Memo) தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்த நிலையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

பிராது 2-ம் தபசிலில் ஆக்கிரமிப்பு செய்து பிராது 1-ம் தபசிலுக்கு முன்பு கருப்பசாமி, மாரியம்மாள் காவல் தெய்வங்களின் பீடங்களை பிரதிவாதிகள் நிறுவக்கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு வழங்கக் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவு தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் இந்த வழக்கு தாக்கல்.

Memo filed that matter settled out of court and hence suit may be dismissed as not pressed. Recorded. Suit is dismissed as not pressed.

2021-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்) K.L. பிரியங்கா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
சிவகிரி